time they took the Mills on lease in 1964, is as high as Rs. 15 lakhs, and that they are not in a position to pay even their Employees' State Insurance/Employees' Provident Fund contributions and electricity consumption charges. As there was no prospect of the Mills being reopened by the present management and as the workmen numbering nearly 400 have been thrown out of employment, this Government requested the Government of India to investigate into the affairs of the mill under the Industries (Development and Regulations) Act. The Government of India have constituted a committee under the Industries (Development and Regulations) Act in January 1971 and the report of the Committee is awaited.

திரு. க. சுப்பு : தலைவர் அவர்களே, இறுதியான முடிவு வரும் வரை வேலை இழந்த தொழிலாளர்களுக்கு பிராவிடன்டு பண்டு நிதியிலிருந்து ரூ. 500 ஏற்கனவே முதல் தவணையாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது தவணையாகத் தொகை கொடுப்பதற்கு அவர்களுடைய பண்டில் நிதி இல்லாத காரணத்தால் எம்ப்ளாயர்ஸ் பண்டிலிருந்து ரூ. 500 போட்டுக் கொடுக்க வேண்டும் என்று ஏற்கனவே சொல்லி அரசுக்கு விண்ணப்பம் அனுப்பியிருக்கிறார்கள். அந்த விண்ணப்பத்தின் பேரில் துரிதமான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது மத்திய அரசாங்கத்தினுடைய அலுவலில் வருகிறது. இதுபற்றி ஈ.பி.எஃப்., கமிஷனரைக் கேட்க வேண்டியது. இந்த அரசுக்கு அதுபற்றித் தெரிவிக்கப்பட்டால், நாம் அதுபற்றிக் கேட்கலாம்.

(இ) கோவை முருகன் ஆலை மூடப்பட்டதும், தொழிலாளர் துயர நிலையும் குறித்து.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"கோவை முருகன் மில் நீண்ட காலமாக மூடிக்கிடந்து, திறந்து சில நாட்கள் ஓடிய பின்னால் மீண்டும் மூடப்பட்டு விட்டபடியால் அதில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் தாங்கமுடியாத துயர நிலையில் உள்ளனர்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : தலைவர் அவர்களே, சட்டப்பேரவை விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"கோவை முருகன் மில் நீண்ட காலமாக மூடிக்கிடந்து, திறந்து சில நாட்கள் ஓடிய பின்னால் மீண்டும் மூடப்பட்டுவிட்டபடியால் அதில் பணியாற்றுகின்ற பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள் தாங்கமுடியாத துயர நிலையில் உள்ளனர்" என்ற அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU S. MADHAVAN : Sir, I place the following statement :—

The Coimbatore Murugan Mills Limited, Coimbatore which availed itself of a loan of Rs. 9.40 lakhs from Tanjore Permanent Bank on Government guarantee, after working for a short period remained closed from 1st May 1968 to 30th October 1970. The mills resumed work on 1st November 1970 but again remains closed with effect from February 10th.

At the instance of this Government the Government of India which investigated into the affairs of this mill, under the Industries (Development and Regulation) Act, recommended the taking over of this mill and this Government accepted the recommendation of the Committee and requested the Government of India to issue orders appointing the Tamil Nadu Textile Corporation Limited as Authorised Controller in respect of this mill.

The Government of India issued orders in December 1970 regarding the take over of this mill and appointed the Tamilnadu Textile Corporation as its Authorised Controller for a period of five years. The question of taking over of this mill in pursuance of the notification of the Government of India was held up as the management had reported that they themselves are now running the mills. Since the mill remain closed now this Government has decided to take over the management of the mill without any delay.

(ஈ) மண்டபத்திலுள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படுவது குறித்து.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப்பேரவையின் விதிகளின் 41-வது விதியின் கீழ்—

"இராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்திலுள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்திற்கு மாற்றப்படுவதால் மிகவும் பின்தங்கிய மாவட்டமான இப்பகுதியின் வளர்ச்சிக்கு ஊறு விளையும் நிலையில் அரசு மேற்கொள்ளவேண்டிய உடனடி நடவடிக்கை பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்திலுள்ள மீன் வள ஆராய்ச்சி நிலையத் தலைமை அலுவலகம் வேறு மாநிலத்துக்கு மாற்றப்படுவதால் மிகவும் பின்தங்கிய மாவட்டமான இப்பகுதியின் வளர்ச்சிக்கு ஊறு விளையும் நிலையில் அரசு மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கை பற்றிய" அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மத்திய கடல் மீனள ஆராய்ச்சி நிலையத்தின் தலைமையிடத்தை மண்டபத்திலிருந்து கொச்சிக்கு மாற்ற இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் செய்த முடிவை, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது நாட்ட ஈர்ப்பு அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ளனர்.